வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
சி.சி.எண்.4/20
வழக்கு சாட்சி – அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயலட்சுமி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சுப்புராம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வெங்கடாஜலபுரம் | சமயம் | |
| தாலுக்கா | தேனி | வயது | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.05.24

**( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. வழக்கில் எதிரிகள் ஆஜராவதற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

அசா1 எனது கணவர். 1ம் எதிரி ஜெகதீசை எனக்கு தெரியும். 2ம் எதிரி வனஜா 1ம் எதிரியின் தாயார். 3ம் எதிரி தாமஸ்ராஜ் 1ம் எதிரியின் உதவியாளர். 4ம் எதிரி சுதாகரன் 1ம் எதிரியின் உதவியாளர். எங்களது இடத்தை சென்ரல் பேங்க் ஆப் இந்தியாவில் அடமானமாக வைத்து ரூ3,50,000/–த்தை கடனாக பெற்றிருந்தோம். மாதம்தோறும் கடன் தொகையை திருப்பிசெலுத்தி வந்தோம். ரூ1,96,000/–ம் பாக்கி கடன் நான்திருப்பி செலுத்தவேண்டியிருந்தது. அப்போது நான் உடல்நிலை சரியில்லாமல் இருந்தேன். அப்போது ஜெகதீசன் என்னிடம் வந்து 10லட்சம் ரூபாய் தனியார் வங்கியில் கடன் வாங்கி தருவதாகவும்,அதை வைத்து விவசாய வேலைகள் செய்துக்கொள்ளுமாறு என்னிடம் ஆசைவார்த்தை கூறினார். மேலும் ஜெகதீசன் என்னிடம் நான் வங்கியில் செலுத்தவேண்டிய பணம் ரூ1,95,900/–த்தை நான் சரிசெய்துவிட்டேன் என்றும், மேலும் கடன் பெறுவதற்கான ஆவணங்களை தயார்செய்துவிட்டேன் என்று கூறி தேதி, மாதம் ஞாபகம் இல்லை 2018ம் வருடம் சென்ரல் பேங்க் ஆப் இந்தியாவில் வைத்து என்னிடம் 3 காசோலைகளிலும், ஒரு பேப்பரிலும் கையெழுத்து மட்டும் வாங்கி கொண்டு ரூ1,95,900/–த்தை எங்களிடம் கொடுத்தார். நான் அந்த பணத்தை சென்ரல் பேங்க் ஆப் இந்தியாவில் செலுத்திவிட்டேன். அப்போது எதிரிகள் மறுநாள் எனது கணவரை பத்திர

அலுவலகத்திற்கு வருமாறு கூட்டிசென்றார்கள். எதிரிகள் ஜெகதீசன், தாமஸ், சுதாகர் ஆகியோர் என் கணவரை ஆட்டோவில் பத்திர அலுவலகத்திற்கு அழைத்து சென்றதாக எனது அப்பா கூறினார். எனது கணவரிடம் என்ன என்று கேட்டபோது லோன் அப்பளை செய்துவிட்டதாகவும், 10 நாட்களில் வந்துவிடும் என்றும் கூறினார். ஆனால் பணம் வங்கி கணக்கில் ஏறவில்லை. சிறிது நாள் கழித்து காவல்நிலையத்திலிருந்து போலிசார் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். நாங்கள் பத்திரம் காணவில்லை என்று நாளிதழில் விளம்பரம் கொடுத்துள்ளதாகவும், அதில் முகவரியாக ஜெகதீசன் என்பவரது சிவாஜி நகர் முகவரியை கொடுத்துள்ளதாகவும் கூறி எங்களிடம் விசாரித்தார்கள். அப்போது தான் எங்களுக்கு வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்த போது 2ம் எதிரி வனஜா பெயரில் எனது கணவர் சுப்புராமுக்கு சொந்தமான நிலத்தை 1ம் எதிரி ஜெகதீசன் எழுதிக்கொடுத்த விபரம் தெரியவந்தது. மேலும் லோனுக்காக பதிவு செய்யப்பட்ட பத்திரம் பவர் பத்திரமாக பதிவு செய்யப்பட்டது தெரியவந்தது. அதன்பின்னர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என் கணவரை எதிரிகள் அழைத்து சென்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் என் கணவருடன் சார்பதிவாளர் அலுவலறத்திற்கு எப்போதும் சென்றதில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி எந்த வங்கியில் என் கணவருக்கு கடன் வாங்கிதருவதாக ஆசைவார்த்தை கூறினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் நிரப்படப்படாத காசோலைகளில் கையெழுத்து வாங்கி சென்றதாக கூறப்படும் காசோலைகளின் எண் எனக்கு தெரியாது. செய்திதாளில் விளம்பரம் கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் கூறியப்பின்பு தான் தெரியும். என் கணவரை ஏமாற்றிவிட்டதாக புகார் எதுவும் என் கணவர் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தெரிந்தபின்பு கொடுத்தார். பொய்யாக விளம்பரம் கொடுத்தார் என்பது தொடர்பாக ராஜேஷ் என்பவர் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். 2018 பிப்ரவரி மாதம் விஜயவாடா செல்வதாகவும் அவருக்கு சொந்தமான பசுமாட்டைதிரும்பி வரும்வரை தனது பசுமாடுகளை பார்த்துக்கொள்ளும்படியும், ஜெகதீசன் என்கணவரிடம் சொன்னதினால் அதன்படி ஜெகதீசனின் 18 பசுமாடுகளை என் கணவர் வளர்த்துவந்து அவைகள் தரும் பாலை

கரந்து அவருக்கு தரவேண்டிய பணத்தை கழித்துவந்தார் என கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர் திரும்பி வந்ததும் 18 மாடுகளுக்கு 8 லட்சம் என விலைபேசி 4 லட்சம் கொடுத்துவிட்டார் என்று போலிச்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல் மீதி 4 லட்சத்தை கொஞ்ச கொஞ்சமாக தருவதாக கூறினார் என்றும் போலிச்விசாரணையில் நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த ஏப்ரல் மாதம் ஜெகதீசன் என் கணவரிடம் வந்து மீதபணத்திற்கு பதிலாக உங்களது நிலத்தை பவர் எழுதி கொடுக்கும்படி கூறினார் என்று போலிச்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால்சரியல்ல. 21.12.18 ம் தேதி ஜெகதீசன் என்னிடம் இருந்து அசல் ஆவணங்களை பிடுங்கி சென்றவிட்டதாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி புகாரில் 5 லட்சம் கொடுத்தால் தான் பத்திரத்தை கொடுப்பேன் என ஜெகதீசன் கூறியதாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார் என்றால் தெரியாது. நான் என் கணவருடன் சேர்ந்துக்கொண்டு பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 ம் எதிரிக்கும் என் கணவர் தரவேண்டிய 16 லட்சத்தை தராமல் அலைகழிப்பு செய்ததால் தான் அவர் பவர் ஆவணம் எழுதி வாங்கினார் என்றால் சரியல்ல. 16 லட்சம் பணம் தரவேண்டியது என எங்கள் ஊரில் பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. மேற்படி பஞ்சாயத்தில் ஏப்ரல் மாதம் 18 ம் தேதிக்குள் தொகையை கொடுத்துவிட்டு நிலத்தை மீட்டுக்கொள்வதாகவும் அப்படி கொடுக்கவில்லை என்றால் நிலத்தை எதிரியை வைத்துக்கொள்ளவதாக பேசி முடிக்கப்பட்டதுஎன்றால் சரியல்ல. குறிப்பிட்ட தேதிக்குள் ஒத்துக்கொண்டபடி தொகையை கொடுக்காததால் தான் எதிரி பவர் பத்திரத்தின் அடிப்படையில் 2 ம் எதிரியின் பெயரில் 1 ம் எதிரி கிரையம் முடித்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.